**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு**

**வழக்கு எண்.சி.சி.எண்.242/2023**

**வழக்கு சாட்சி.அ.சா.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : மூர்த்தி | ஜாதி | : |
| தந்தை பெயர் | : ரத்தினசாமி | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : |

(வழக்கின் 4,5-ம் எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. மற்ற எதிரிகளின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.10.2024**

முதல்விசாரணை

நான் தற்போது ஆசனூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 27.12.2022-ம் தேதி இரவு 09.30 மணியளவில் காவல் ஆய்வாளர் செல்வம், சிறப்பு உதவி ஆய்வாளர் அர்த்தனாரீஸ்வரர், தலைமை காவலரான நானும், Food Cell உதவி ஆய்வாளர் சக்திவேல், தலைமை காவலர்கள் இருவர் என்று நாங்கள் அனைவரும் மகாராஜபுரம் சோதனை சாவடியில் நின்று வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தோம். TN 29 AU 8839 என்ற பதிவு எண் கொண்ட ஈச்சர் வாகனம் ஒன்று வந்தது, நிறுத்த சொன்ன போது, தள்ளி சென்று நிறுத்தினார்கள். அருகில் சென்றபோது, வாகனத்தில் மூவர் இருந்தார்கள், அதில் மூவரும் இறங்கி சென்றபோது, இருவரை மடக்கி

பிடித்தோம். விசாரித்ததில், மாதேவா தப்பி சென்றார் என்று தெரிந்து கொண்டோம். வாகனத்தை சோதனை செய்து பார்த்தபோது, அதில் 3250 கிலோ ரேசன் அரிசி இருந்தது. பிடிபட்ட எதிரிகளை விசாரித்தபோது, அவர்களில் குமார் என்பவர் சிக்கல்லி, நெய்த்தாளபுரம், முதியனூர் ஆகிய பகுதிகளில் அரிசியை வாங்கி கர்நாடகா மாநிலத்திற்கு விற்பனைக்காக அரிசியை கள்ளச்சந்தையில் விற்பனை செய்வதற்காக என்று கூறினார். பிடிப்பட்ட இரண்டு எதிரிகளையும் Food Cell உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்தோம்.

குறுக்கு விசாரணை

நீங்கள் தனியறிக்கை கொண்டு தான் ஒப்படைத்தீர்களா என்றால், ஆமாம், ஆய்வாளர் அறிக்கை தயார் செய்தார். எதிரிகளை பிடித்து விசாரணை செய்ததாக கூறியுள்ள நிலையில், சம்பவ இடத்தில் அவர்களிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதா என்றால், இல்லை. கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்பட்டதா என்றால், இல்லை. எவ்வளவு நேரம் இந்த சோதனை நடைபெற்றது என்றால், சுமார் 3/4 மணியிலிருந்து 1 மணி நேரம் இருக்கும். அந்த சமயத்தில் எந்தவொரு ஆவணமும் தயார் செய்யப்படவில்லை என்றால், சரிதான். அரிசியை சம்பவ இடத்தில் வைத்து எடைபோட்டு பார்த்தீர்களா என்றால், இல்லை, Food Cell அதிகாரிகள் எடை போட்டு பார்த்து, தெரிவித்தார்கள். சிறப்பு அறிக்கை எப்போது வழங்கப்பட்டது என்றால், இரவு 10.30 மணிக்கு தாளவாடி ஆய்வாளர், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை ஆய்வாளரிடம் ஒப்படைத்தார்.

2. நீங்கள் கூறுவது போல் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில் வாகன சோதனை எதுவும் மேற்கொள்ளவில்லை என்றாலும், வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும், எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றாலும், தனிஅறிக்கை எதுவும் கொடுக்கப்படவில்லை என்றாலும், சரியல்ல. சம்பவம் பற்றி நேரடியாக எந்த விபரமும் தெரியாமல், உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தெரியாத ஒரு சம்பவத்தைப் பற்றி, பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னாலும், சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு**

**வழக்கு எண்.சி.சி.எண்.242/2023**

**வழக்கு சாட்சி.அ.சா.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அர்த்தனாரீஸ்வரன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | மாதப்பன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

(வழக்கின் 4,5-ம் எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. மற்ற எதிரிகளின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.10.2024**

முதல்விசாரணை

நான் தற்போது ஈரோடு தாலுக்கா காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

நான் தாளவாடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, Food Cell உதவி ஆய்வாளர் சக்திவேல், முருகன், செந்தில்குமார் ஆகியோருடன் நானும், தாளவாடி காவல் ஆய்வாளர் செல்வம், மூர்த்தி மற்றும் நான் மகாராஜபுரம் செக்போஸ்டில் சோதனையில் ஈடுபட்டிருந்தபோது, TN 29 AU 3839 என்ற பதிவு எண் கொண்ட ஈச்சர் வண்டி அவ்வழியாக தாளவாடியை நோக்கி வந்தது. அதை தடுத்து நிறுத்தி சோதனை செய்ய முற்பட்டபோது, வாகனத்தை நிறுத்தாமல், சற்று தள்ளி நிறுத்தியபோது, நாங்கள் வாகனத்தை சோதனை செய்தபோது, இருவரைப் பிடித்தோம், ஒருவர் தப்பி ஓடிவிட்டார். வாகனத்தில் அரசினால் வழங்கப்படும் பொது விநியோகத்

திட்ட 65 மூட்டைகளில் 50 கிலோ வீதம் அரிசி இருந்தது. அதை கைப்பற்றி ஆய்வாளர், Food Cell உதவி ஆய்வாளர் விசாரணை மேற்கொண்டார். விசாரணைக்கு நான் உடன் இருந்தேன்.

குறுக்கு விசாரணை

சம்பவத்தின் போது நீங்கள் எத்தனை மணிக்கு சோதனை சாவடிக்கு சென்றீர்கள் என்றால், இரவு சுமார் 08.00 மணி இருக்கும். இந்த வழக்கு வாகனத்தை சோதனையிடுவதற்கு முன் எத்தனை வாகனங்களை சோதனையிட்டு, வழக்கு பதிவு செய்தீர்கள் என்றால், சுமார் 5, 6 வாகனங்களை சோதனை செய்தோம், அதில் எந்தவொரு பொருளும் இல்லை, எந்த பொருளும் இல்லாததால், வழக்கு பதிவு செய்யவில்லை. சோதனை சாவடிக்கு நீங்களும், வேறு யாரெல்லாம் சென்றீர்கள் என்றால், எங்கள் காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் தலைமை காவலர், Food Cell உதவி ஆய்வாளர், இரண்டு தலைமை காவலர்கள் ஒன்றாக சென்றோம். வாகனமானது எங்கே எடைபோட்டு பார்க்கப்பட்டது என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது, Food Cell போலீசார் செய்தார்கள். தனியறிக்கை ஏதேனும் கொடுக்கப்பட்டதா என்றால், இல்லை. நீங்கள் உங்கள் முதல் விசாரணையில் கூறியுள்ளதுபோல், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் வாகன சோதனையில் ஈடுபடவில்லை என்றாலும், வழக்கு சொத்துக்கள் பிடிபட வில்லை என்றாலும், எதிரிகள் பிடிக்கப்படவில்லை என்றாலும், சரியல்ல. சம்பவம் பற்றி நேரடியாக எந்த விபரமும் தெரியாமல், Food Cell போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யான ஒரு சம்பவத்திற்காக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால், சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.